[1993 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு, தர்மபுரி, திருச்சி, பெரியார், தஞ்சாவூர், நெல்லை—கட்டபொம்மன், மதுரை, திண்டுக்கல்-அண்ணா ஆகிய இடங்களில் சேலம் 'சாகோ-செர்வ் சேவை நிறுவனத்தோடு இணைந்தே, 'சப்' கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி, அவை Salem Sago Serve வோடு ஒருங்கிணைந்து செயல்படத் திட்டம் தயாரித்து, செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை அடக்கம் காரணமாக உறுப்பினர் ** அது அவைக்குறிப்பிலிருப்பது நல்லதல்ல, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

361—

வாசுதேவநல்லூர் தொகுதி சிவகிரியில் துணைக் கருவூலம் அமைத்தல்.

*10244.—திரு. ஆர். ஈஸ்வரன் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரியில் ஒரு துணைக் கருவூலம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ;

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகிரி வட்டத்தின் தலைமையிடமான சிவகிரியில் தற்போது ஒரு துணைக் கருவூலம் இயங்கி வருகிறது. வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் துணைக் கருவூலம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.